# அரசு அலுவலர் பயிற்சிநிலையம், பவானிசாகர்

CIVIL SERVICE TRAINING INSTITUTE, BHAVANISAGAR

அலுவலகத் தொலைபேசி எண்: 04295 – 240241

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| டாக்டர்.மு.வீரப்பன்,எம்.பி.பி.எஸ்.,<br>மாவட்ட வருவாய் அலுவலர்/முதல்வர்,<br>அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,<br>பவானிசாகர் – 638451,<br>ஈரோடு மாவட்டம். | இயக்குநர்,<br>பள்ளிக் கல்வித் துறை,<br>கல்லூரி சாலை,சென்னை–600 006 |

ந.க.எண்.அ3/789/2020 நாள்.14.10.2020

அய்யா / அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள் | பயிற்சி – அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் – இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி 43–வது அணி – கொரோனா வைரஸ் காரணமாக 17.03.2020 பிற்பகல் முதல் பயிற்சி நிறுத்தி வைக்கப்பட்டது – கோவிட் - 19 கோட்பாடுகளை பின்பற்றி – அடிப்படைப் பயிற்சி அளித்தல் – தொடர்பாக. |
| பார்வை | 4. இவ்வலுவலக கடிதம் ந.க எண். அ3/789/2019 நாள்.04.02.2020<br>5. பயிற்சித் துறைத் தலைவர் கடித எண் 10137/ப-1/2020-1, நாள். 17.03.2020<br>6. பயிற்சித் துறைத் தலைவர் கடித எண்.பதுத/622/2020, நாள்.07.10.2020 |

*************

பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி 43- வது அணி 16.03.2020 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டு பார்வை 2-ல் காணும் அரசு கடிதத்தின் படி கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 17.03.2020 பிற்பகல் முதல் பயிற்சி நிறுத்தி வைக்கப்பட்டது.

பார்வை 3-ல் காணும் கூடுதல் தலைமைச் செயலர் / பயிற்சித் துறைத் தலைவர், சென்னை அவர்களின் கடிதத்தின் படி தற்பொழுது முதல் கட்டமாக தமிழக அரசின் COVID -

19 வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 43-வது அணி பயிற்சியில் அனுமதிக்கப்பட்ட பயிற்சியாளர்களில் 200 பயிற்சியாளர்களுக்கு மட்டும் சமூக இடைவெளி பின்பற்றி பயிற்சி அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு வரும் பொழுது பணி விடுவிப்பு ஆணை, கோவிட் 19 பரிசோதனை முடிவு அறிக்கை மற்றும் பயிற்சியாளரை அடையாளம் காணும் விதத்தில் பயிற்சியாளரின் சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் பணி விடுவிப்பு ஆணையில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, முறையே அலுவலகத் தலைவரால் மேலொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 43- வது அணி பயிற்சி 27.10.2020 முதல் 14.12.2020 வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனவே தங்கள் துறையிலிருந்து 43-வது அணி அடிப்படை பயிற்சி பெறுவதற்காக ஏற்கனவே பணிக்கப்பட்ட கீழ்க்கண்டுள்ள எண்ணிக்கையில் உள்ள அலுவலர்களை பயிற்சிக்கு 26.10.2020 பிற்பகல் 5.00 மணிக்குள் இப்பயிற்சி நிலையத்தில் ஆஜராகும் வண்ணம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பயிற்சியாளர்களுக்கு தெளிவுபடுத்தி பணியிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

43 –வதுஅணிக்கானபயிற்சியாளர்கள்ஒதுக்கீட்டுவிவரம்

| | | |
|---|---|---|
| 1 | துறையின் பெயர் / பிரிவு | பள்ளிக் கல்வித் துறை |
| 2 | அணி எண் | 43 |
| 3 | பயிற்சிக் காலம் | 27.10.2020 – 14.12.2020 |
| 4 | ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | 161 |
| 5 | பயிற்சியில் மீள அனுமதிக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 26.10.2020 பிற்பகல் 5.00 மணிக்குள் தவறாது ஆஜராக வேண்டும். |
| 6 | பயிற்சியாளர் சேர்க்கைப் மறு ஆய்வுப் பணி நடைபெறும் இடம் | டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாம் கலையரங்கம், குறிஞ்சி வளாகம், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் |

## பயிற்சியாளர்களுக்கான பொதுவான அறிவுரைகள்

15. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் கோவிட் - 19 பரிசோதனை 23.10.2020 அல்லது 24.10.2020-ல் மேற்கொண்டு அதன் முடிவுகளை உடன் எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் பரிசோதனை முடிவு பெற இயலாதவர்கள் தங்களுடைய கைபேசியில் வரும் குறுந்தகவலை (SMS) உடன் எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
16. பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு வரும் பொழுது கோவிட் - 19 தொடர்பான அறிகுறிகள் (காய்ச்சல், தொடர் இருமல், சளி) உள்ள பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
17. இணை நோயுற்ற தன்மை (Co-Morbidity),1. உயர் இரத்த அழுத்தம், 2. கட்டுப்பாடில்லா நீரிழிவு நோய், 3. சிறுநீரக கோளாறு, 4. ஆஸ்துமா / நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு நீண்ட நாட்களாக மருந்து எடுத்துக் கொள்ளும் நபர்கள், தீராத நோய் உள்ளவர்கள் மற்றும் சமீபத்தில் அறுவை சிகிச்சை மேற்கொண்டவர்களுக்கு தற்பொழுது கோவிட் - 19 சூழ்நிலையில் பயிற்சி பெற அனுமதி இல்லை.
18. தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பயிற்சியாளர்களுக்கு இப்பயிற்சியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை. பணி புரியும் அலுவலகத்தில் உள்ள அலுவலர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் இல்லை என்பதற்கு சான்று பெற்று வர வேண்டும்.
19. தற்சமயம் கோவிட் - 19 சூழ்நிலை காரணமாக கர்ப்பிணிப் பெண் பயிற்சியாளர்கள் மற்றும் குழந்தைகளுடன் வரும் பயிற்சியாளர்களுக்கு அனுமதி இல்லை.
20. இந்த பயிற்சிக் காலம் முழுவதும் பயிற்சியாளர்களுக்கு எவ்வித விடுப்பும் மற்றும் அனுமதியும் துய்க்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

21. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் **இந்த பயிற்சிக் காலம் முழுமைக்கும் (40 நாட்களுக்குரிய) தேவையான பொருட்களை** (தட்டு, டம்ளர், நீல நிற சீருடை, பேஸ்ட், சோப்பு) **கொண்டு வர வேண்டும். (பயிற்சியாளர்கள் வெளியில் செல்ல அனுமதி இல்லை.)** உள் விளையாட்டு அரங்கில் பயன்படுத்தப்படும் காலணி இப்பயிற்சி நிலையத்தில் உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
22. பயிற்சியாளர்கள் அனைவரும் பயிற்சிக் காலம் முழுவதும் தமிழக அரசின் நிலையான கோவிட் - 19 வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும்.
23. பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு வரும் பொழுது ஏற்கனவே செலுத்திய பயிற்சிக் கட்டணங்களுக்குரிய இரசீதினை தவறாமல் கொண்டு வர வேண்டும்.
24. இந்த பயிற்சிக்கு அனுப்பப்படும் பயிற்சியாளர்கள் பாதுகாப்பு கருதி விலை மதிப்புள்ள நகைகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை கொண்டு வருதல் கூடாது.
25. பயிற்சியின் போது முகக்கவசம் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். பயிற்சிக் காலத்திற்கு முழுவதும் தேவைப்படும் முகக்கவசத்தை உடன் கொண்டு வர வேண்டும்.
26. கோவிட் - 19 வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாத பயிற்சியாளர்கள் உடன் பயிற்சியிலிருந்து விடுவிக்கப்படுவதுடன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு துறைத் தலைமைக்கு பரிந்துரை செய்யப்படும்.
27. பயிற்சிக்கு வரும் பயிற்சியாளர்கள் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் 26.10.2020 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள் ஆஜாராக வேண்டும்.
28. பயிற்சியாளர்கள் பயிற்சிக் காலம் முழுவதும் **(மாற்றுத் திறனாளிகளின் வாகனங்களைத் தவிர)** இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை எடுத்து வர அனுமதி இல்லை.

14/10/2020

மா.வ.அ / முதல்வர்

தி
14/10/2020.